ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1860/6 - 2014 අප්‍රේල් මස 29 වැනි අඟහරුවාදා - 2014.04.29

*1860/6 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ், மாத்தறை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

*கட்சி உறுப்பினர் பதவி முடிவடைந்துள்ளதன் காரணமாக மாத்தறை பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரது பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;*

*தமித் அத்தநாயக என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் மாத்தறை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. எம். அமல் பிரசங்க என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும்;*

*இப்போது மாத்தறை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் வேவெல்வல ஹேவகே ரவீந்திர விஜய குமார ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. எம். அமல் பிரசங்க என்பவர், மாத்தறை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகிறேன்.*

டபிள்யூ. எச். ஆர். விஜய குமார,
தெரிவத்தாட்சி அலுவலர்,
மாத்தறை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
மாத்தறை ,
2014, ஏப்பிறல் 07.

*5 - 408*

**உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின்**
**10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்**

கொலொன்ன பிரதேச சபை

*கொலொன்ன பிரதேச சபையின் உறுப்பினரொருவரான திரு. பேச்சிமுத்து ராஜேந்திரன், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக இல்லாதொழிந்துள்ளதால் மேற்படி சபையின் அவரது உறுப்பினர் பதவியை அவர் இழந்துள்ளார் என கொலொன்ன பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் மாத்தர ஆச்சிகே பத்மசிறி சந்திரவங்ஸ பெரேரா ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10அ (1) (அ) என்னும் பிரிவின்கீழ் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

எம். ஏ. பி. சி. பெரேரா,
தெரிவத்தாட்சி அலுவலர்,
கொலொன்ன பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
இரத்தினபுரி,
2014, ஏப்பிறல் 09.

5- 409

---

**உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின்**
**10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்**

முலடியன பிரதேச சபை

*முலடியன பிரதேச சபையின் உறுப்பினரொருவரான திரு. ஆரச்சிகே முனசிங்க ரங்ஜித், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக இல்லாதொழிந்துள்ளதால் மேற்படி சபையின் அவரது உறுப்பினர் பதவியை அவர் இழந்துள்ளார் என முலடியன பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் வேவெல்வல ஹேவகே ரவீந்திர விஜய குமார ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10அ (1) (அ) என்னும் பிரிவின்கீழ் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

டபிள்யூ. எச். ஆர். விஜய குமார,
தெரிவத்தாட்சி அலுவலர்,
முலடியன பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
மாத்தறை,
2014, ஏப்பிறல் 07.

5- 410

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.